எம்.சி.ஓ.பி எண்: 1772/2021 தேதி: 10.02.2026

எ, மசா. : 1

பெயர் : மாணிக்கம்

த/பெ. : காந்தி

வயது : 29

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எ,மசாஆ 1 முதல்5 வரை தாக்கல் செய்கிறேன்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து சமயத்தில் வாகனத்திற்கு காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் விபத்து சமயத்தில் தவற விட்டு இருக்கலாம் என்றால் சரியல்ல. விபத்தில் அடிப்பட்டு இறந்த நபர் 3–ம் தரப்பினர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் காப்பீடு நிலுவையில் உள்ள காரணத்தினாலும் அடிப்பட்டு இறந்த நபர் 3–ம் தரப்பினர் என்பதாலும் எங்கள் நிறுவனம் தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.